வியாபாரத்திலோ எப்படியோ வரலாம். அதேபோல் 30 நாள், 28 நாள் வேலை செய்வதைப்பற்றி கணக்கில்லாமல் வருஷத்திற்கு 2,000 ரூபாய் எல்லை என்று வைக்கப்பட்டிருக்கிறது.

THIRU K. VINAYAKAM : On a point of order, Sir. The Minister is giving a wrong reply to the House. The question is whether the Harijan students, the annual income of whose parents is more than Rs. 2,000 will be given scholarships. In answer to my supplementary question the Minister said that there was no income limit for grant of scholarship to Harijan students. They are contradictory. Either the one must be correct or the other must be correct. Which of them is correct?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : நான் சொன்னதை கனம் அங்கத்தினர் அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. நான் தமிழில்தான் பேசுகிறேன். ஒருவேளை ஆங்கிலத்தில் சொன்னால் தான் புரியுமோ, என்னவோ. நான் அப்படிச் சொல்லவில்லை.

திரு. கே. விநாயகம் : ஆங்கிலத்தில்தான் சொல்லுங்களேன்.

(பதில் இல்லை)

Office of Sessions Judge, Madurai

*335 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Law and Co-operation be pleased to state—

(a) whether the Office of the Sessions Judge, Madurai has been shifted from the present place at Thirumalainaicken Mahal : and

(b) if so, the reason therefor?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) திருமலை நாயக்கர் மகாலிலுள்ள அலுவலகங்களில் சில பிரிவுகள் ஒரு அறையிலிருந்து வேறு அறைக்கு மாற்றப்பட்டபோதிலும், இந்த அலுவலகங்கள் திருமலை நாயக்கர் மகாலிலேயே செயல்பட்டு வருகின்றன.

(இ) இவ் வினா எழவில்லை.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : தலைவரவர்களே, திருமலை நாயக்கர் மகாலிலிருந்து செஷன்ஸ் கோர்ட்டை மாற்ற, அந்த மகால் மிகவும் பழுதான நிலைமையிலிருப்பதால் என்ற காரணத்தைக் காட்டி வேறு பகுதிகளிலே மற்ற அலுவலகங்களை வைப்பதால் அதற்கு அபாயம் ஏற்படாதா என்று உத்தேசம் பண்ணி, திருமலை நாயக்கன் மகாலிலிருந்து எல்லா அலுவலகங்களையும் மாற்ற இந்த அரசாங்கம் முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, எந்த அலுவலகமும் இப்பொழுது மாற்றப்படவில்லை. அங்கே சிலவிடங்கள் மாற்றப்பட்டிருக்கின்றன. புது நீதி மன்றம் கட்டப்பட்டு வருகிறது. அதற்குப் பிறகு எல்லா அலுவலகமும் மாற்றப்படும்.

1968 மார்ச் 26]

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவரவர்களே, பண்டைத் தமிழகக் கட்டிடக் கலைக்குச் சான்றாகவும், இன்றைய பொறியியல் துறைக்குச் சவாலாகவும் விளங்கும் இந்த மகாலில் அரசின் அலுவலகங்கள் செயல்படுவதால் அதன் அழகு கெடுகிறது. மேலும் அங்கு அடிக்கடி பழுது ஏற்படுவதால் அதைக் கவனிக்க அரசாங்கம் ஏற்பாடு செய்ததா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்த மகாலைப் பழுது பார்த்து நல்ல முறையில் வைக்க ஐந்து இலட்சம் ரூபாய் ஒதுக்கப் பட்டிருக்கிறது, நீதி மன்றம் மாற்றப்பட்டவுடன் அந்த வேலை துவங்கும்.

திரு. கரு. சீமைச்சாமி : இந்த நீதிமன்றத்திற்குப் புதிதாகக் கட்டிடம் கட்டிக் கொண்டிருப்பதாகக் கூறினார்கள். அந்தக் கட்டிடம் எப்போது கட்டப்பட்டு நீதிமன்றம் அங்கே மாற்றப் படும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நமது அங்கத்தினர் சமீபத்தில் மதுரைக்குச் சென்றிருப்பார் என எண்ணுகிறேன். மிக விரைவாக வேலை நடந்து வருகிறது. ஜூன் மாதத்திற்குள் 'கிரவுண்ட் ஃப்ளோர்' மட்டும் முடிந்துவிடும் என்று எதிர்பார்க்கிறேன்.

Government Ophthalmic Hospital, Madras

* 336 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) is it a fact that the Government Ophthalmic Hospital in Madras is kept in a most insanitary condition; and

(b) if so, the steps taken to improve it?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

THIRU K. VINAYAKAM : Is the Minister aware of the fact that many "letters to the editor" appeared in the Press regarding the insanitary condition of this Hospital and has the Minister at least once visited the hospital at least after any giving notice of the question? It is still in a very sad state. Will the Government rectify the defecti n the intersets of the atients, in the interests of the people and in the interests of the party in power instead of evading a proper answer to my question?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி நேரத்தில் "இவேடிங் தி கொஸ்டின்" என்றெல்லாம் சொல்லக் கூடாது. கேள்வியாகக் கேளுங்கள்.

THIRU K. VINAYAKAM : He can evade, I have a right to say that he is evading.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி நேரத்தில் குற்றச் சாட்டுகள் இருக்கக் கூடாது என்று விதியிருக்கிறது.